பக்கங்கள்: ஆறு

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

Sme

# உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 10 வியாழக்கிழமை (20-05-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 173

# முக்கிய அரசாங்க இலக்குகள் மீது தாக்குதல் நடக்குமென அச்சம்!

## விஜேதுங்காவுக்கு அழுத்தம் கொடுக்க புலிகள் திட்டமாம்

கொழும்பு, மே 20

முக்கிய அரசாங்க இலக்குகள் மீது துணிகரத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று பாதுகாப்புத்துறை மூத்த அதிகாரிகள் அச்சம் தெரிவித்திருக்கின்றனர்.

ஜனாதிபதி விஜேதுங்கா தலைமையிலான புதிய அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், அதனை அதிகரிக்கச் செய்யும் விதத்தில், விடுதலைப் புலிகள் இந்தத் தாக்குதல்களை நடத்தும் சாத்தியம் உண்டு என்று அந்த அதிகாரிகள் அச்சம் கொண்டுள்ளதாக ''சண்டே ஐலண்ட்'' தகவல் வெளியிட்டுள்ளது.

''சண்டே ஐலண்ட்'' இது குறித்துத் தெரிவித்திருப்பதாவது:- ஜனாதிபதி விஜேதுங்கா தலைமையிலான அரசாங்கத்தின் மீதான அழுத்தத்தை அதிகரிக்கச் செய்யும் விடுதலைப் புலிகளின் தந்திரோ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொமாண்டோப் படையின் பாதுகாப்பு ரணிலுக்கு!

கொழும்பு, மே 20

புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு பிரதிப் பொலீஸ் மா அதிபர் ஒருவரின் தலைமையிலான பிரதமர் பாதுகாப்புப் பிரிவுடன், பொலீஸ் கொமாண்டோக்களின் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருக்கிறது

இதுவரை பிரதமராக இருந்தபோது திரு விஜேதுங்காவுக்கு பொலீஸ் கொமாண்டோக்களின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை.

மே தினமன்று முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பொலீஸ் கொமாண்டோப் பாதுகாப்பும் பிரதமருக்கு வழங்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதி பாதுகாப்பும்

[5 ஆம் பக்கம் பார்க்க]

### பிரேமா கொலையை அடுத்து

## ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவிலிருந்து பலர் நழுவல்!

கொழும்பு, மே 20

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் படுகொலையை அடுத்து, ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் இருந்து தம்மை இடமாற்றம் செய்யும் படி இப்பிரிவில் பணியாற்றிவரும் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் பொலீஸ் மா அதிபரைக் கேட்டிருக்கிறார்.

பிரேமதாஸாவின் படுகொலையின் பின்னர் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் தொடர்ந்து பணியாற்றும் நிலையில் தான் இல்லை என்று அந்த அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

இதே வேளை —

மிகமிக முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பிரிவுகளில் பணிபுரிந்து வரும்

(5ஆம் பக்கம் பார்க்க)

### வடபகுதிக்குரிய

## ஆயிரத்துக்கும் அதிகமான தபாற்பொதிகள் தேக்கம்

யாழ்ப்பாணம், மே 20

வடபகுதிக்குரிய ஆயிரத்திற்கும் அதிகமான தபாற்பொதிகள் கொழும்பு மத்திய தபால் நிலையத்தில் கடந்த இரண்டு மாதங்களாக தேங்கிக் கிடப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கடந்த வியாழக்கிழமை (13 ஆம் திகதி) பருத்தித்துறை வந்த குமண கப்பலில் தபாற் பொதிகள் எடுத்து வரப்படாமை குறித்தும் —

இங்கிருந்து அனுப்பப்பட்ட தபாற் பொதிகள் கொழும்பில் இறக்கப்படாமல் கப்பலில் ''சுற்றுலா'' செய்து வருவது குறித்தும் —

மக்கள் அதிருப்தி தெரிவித்திருப்பது குறித்துக் கொழும்பில் உள்ள வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகத்துக்குத் தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது.

வடமாகாண அஞ்சல் அதிபர் நாயகத்துக்கு அவரது சிரேஷ்ட நிர்வாகச் செயலாளர் அனுப்பி வைத்துள்ள தகவல் குறிப்பில் பின்வரும் விடயங்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன;-

✱ மார்ச் மாதம் 17 ஆம் திகதிக்கு பின் பதிவுத் தபால்கள் எதுவும் கொழும்பிலிந்து இங்கு அனுப்பி வைக்கப்படவில்லை இதன் பின்னர் இரண்டு கப்பல்கள் இங்கு வந்திருந்தன.

✱ ஏப்ரல் 5 ஆம் திகதிக்கு பின்னர் முத்திரைகளும் கொழும்பில் இருந்து அனுப்பப்படவில்லை. (அ எ-16?)

## தையிட்டியில் சிக்கியிருந்த நால்வர் நேற்று விடுவிப்பு

யாழ்ப்பாணம், மே 20

வலி வடக்கில் படையினரிடம் சிக்குண்டவர்களில் நால்வர் நேற்று அங்கிருந்து விடுவிக்கப்பட்டனர்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக உறவினர்களைப் பிரிந்து அங்கு சிக்குண்டிருந்த தையிட்டிப் பகுதியைச் சேர்ந்த நான்கு குடும்பப் பெண்களே விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர். செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரால் நேற்று அவர்கள் இங்கு கூட்டி வரப்பட்டனர்.

இளையதம்பி தெய்வானை (வயது 69), சின்னையா செல்லம்மா (வயது 71), செல்லையா ஆச்சிப் பிள்ளை (வயது 68), முதலித்தம்பி செல்லம்மா (வயது 65) ஆகிய நால்வரும் காங்கேசன்துறையில் இருந்து 'குமண' கப்பல் மூலம் நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு அழைத்து வரப்பட்டனர்.

படையினரின் கட்டுப்பாட்

(5ஆம் பக்கம் பார்க்க)

## சிறிமாவோ - காமினி கட்சிகள் கூட்டாட்சி அமைக்க உடன்பாடு

கொழும்பு, மே 20

ஐக்கிய தேசியக் கட்சி அதிக வாக்குகளைப் பெற்றுள்ள போதிலும், தனித்து ஆட்சி அமைக்கும் பலத்தைப்பெறத் தவறிய வடமேல் மாகாண சபையிலும், தென் மாகாண சபையிலும் சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், காமினி திஸ்ஸநாயக்கா தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் இணைந்து ஆட்சி நடத்த உள்ளன.

இது தொடர்பான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும், திரு. காமினி திஸ்ஸ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமச்சந்திராவுக்கு முதலமைச்சர் பதவி?

வடமேல் மாகாண சபை முதலமைச்சராக ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் பிரேமச்சந்திராவையும் —

தென் மாகாணசபை முதல்வராக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த அமரசிறி தொடங்கொடவையும் — நியமிக்க பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணிக்கும் இடையில் இணக்கம் ஏற்பட வாய்பிருப்பதாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த திருமதி சந்திரிக்கா குமாரணதுங்கா நேற்றுத் தெரிவித்தார். (இ-6)

## அமைச்சரவை பேச்சாளராக ஹரோல்ட்ஹேரத்

கொழும்பு, மே 20

அமைச்சரவையின் புதிய பேச்சாளராக நிதி ராஜாங்க அமைச்சரும் வெளியுறவு அமைச்சருமான ஹரோல்ட் ஹேரத் நியமிக்கப்பட்டார்.

இது வரை இப்பதவியை வகித்தவரான திரு ரணில் விக்கிரமசிங்கா பிரதமராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இப்புதிய நியமனம் செய்யப்பட்டது.

இருவரும் நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டனர். (இ-எ)

## தீர்மானிக்கும் உரிமை ஆளுநருக்கே!

கொழும்பு, மே 20

தனித்து எக்கட்சியும் பெரும்பான்மை பெறத் தவறிய வடமேல் மாகாணத்திலும், தென்மாகாணத்திலும் எந்தக்கட்சிக்கு கூடுதல் ஆதரவு உள்ளது என்பதைத் தீர்மானிக்கும் உரிமை ஆளுநருக்கே உள்ளது. இந்த இரு மாகாணங்களிலும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சியை விட கூடுதல் ஆசனங்களைப் பெற்றுள்ள போதிலும் தனித்துக் கூடுதல் வாக்குகளைப் பெற்ற கட்சி என்ற ரீதியில் ஆட்சி அமைக்க ஐக்கிய தேசியக் கட்சிக்கே முதலில் அழைப்பு விடுக்கப்பட

(6 ஆம் பக்கம் பார்க்க)

### இனப்பிரச்சினையைத் தீர்க்க

## இந்தியா தலையிட முனைந்தால் அவ்வேளை பொருத்தமான முடிவு

### டி, பி. வெளியிட்ட தகவல்

கொழும்பு, மே 20

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியா தலையிட முனையும் பட்சத்தில், அந்த நேரத்தில் அது குறித்துப் பொருத்தமான முடிவு எடுக்கப்படும் என்று ஜனாதிபதி விஜேதுங்கா தெரிவித்திருக்கிறார்.

கண்டி ஜனாதிபதி மாளிகையில் கடந்த சனிக்கிழமை நடந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைக் கூறினார்.

பிரஸ்தாப செய்தியாளர் மாநாட்டில் அவர் தெரிவித்த தகவல்கள் சில ஏற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி

அருள்மிகு கும்பழாவளைப்

**பிள்ளையார் கோயில்**

# மஹோற்சவம்

25 - 05 - 1993 தொடக்கம் 05 - 06 - 1993 வரை நடைபெறும்.

**25 - 05 - 1993** கொடியேற்றம் பகல் **11-00** மணி

**26 - 05 - 1993** தொடக்கம் **02 - 06 - 1993** வரை பகல் திருவிழா **12 - 30** மணி வரைக்கும் இரவுத் திருவிழா பி .ப **6-30** மணி வரைக்கும் சிறப்பாக நடைபெற்றுப் பூர்த்தியாகும்.

**03-06 1993** தேர்த் திருவிழா காலை **9 00** மணிக்கு

**04 06-1993** தீர்த்தோற்சவம் காலை**10-00** மணிக்கு

**05-06-1993** பூங்காவனத் திருவிழா பகல் சிறப்பாக நடைபெற்று பி.ப. **6-30** மணிக்குப் பூர்த்தியாகும்.

தேர்த் திருவிழா அன்று நடைபெறவிருக்கும் அன்னதானத்தில் அடியார்களைப் பங்குபற்றுமாறு அன்புடன் வேண்டுவதோடு, பொருளுதவி செய்ய விரும்பின் ஆலயக் காரியாலயத்தில் செலுத்துமாறும் மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆலய தர்மகர்த்தாக்கள் சபை

(5927)


## நாளை

யாழ்ப்பாணம், மே 20

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவை, தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் வாராந்தம் வெள்ளி தோறும் நடத்தி வரும் நிகழ்ச்சிகளில் —

நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு திரு. கே. இராமநாதனின் மெல்லிசை நிகழ்ச்சி இடம்பெறும்.

## கிராம உத்தியோகத்தர் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், மே 20

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர்களில் சுமார் 100 பேருக்கு நாளை மறுதினம் சனிக்கிழமை முதல் பயிற்சிநெறி ஒன்று ஆரம்பமாகவுள்ளது.

யாழ் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு சனி, ஞாயிறு தினங்களில் இந்தப்பயிற்சி நெறி நடைபெறும்.

ஏற்கனவே சுமார் 100 பேர் இப் பயிற்சிநெறியை முடித்து சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-175)


**நிரு**

**ரியூசன் சென்ரர்**

கோண்டாவில்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை

**1993**

**வினா-விடை**

வகுப்பு

(Paper Class)

ஆரம்பம்:

**01-06-1993**

கணிதம்

நயினை S.S பிள்ளை

தமிழ்

திரு. S. சுந்தரலிங்கம்

(சி-4762)


## பிரேமா கொலையை அடுத்து

# சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி பதவி விலக விரும்பினார்

கொழும்பு, மே 20

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா படுகொலையுண்ட மறுதினம் மிகவும் சிரேஷ்ட பொலீஸ் உயர் அதிகாரி ஒருவர் தமது பதவி விலகல் கடிதத்தை புதிய ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

திரு. பிரேமதாஸாவை பாதுகாக்க பொலீஸார் தவறிவிட்டனர் என்று அரசாங்கம் கருதும் பட்சத்தில் தாம் பதவி விலகத் தயாராக இருப்பதாக அந்த உயர் அதிகாரி தமது கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

ஆனால் அந்த அதிகாரியை தொடர்ந்து பதவியில் இருக்கும்படி பணிப்புரை விடுக்கப்பட்டது. (உ-எ)

## பிரேமா போல் இல்லை புதியவர்:

# ரூபவாஹினி குழுவினரை திருப்பி அனுப்பிய ஜனாதிபதி

கொழும்பு, மே 20

ஜனாதிபதி விஜேதுங்கவை அமைச்சர் தொண்டமான் சந்தித்தபோது அதனைப் படம் பிடிக்கச்சென்ற ரூபவாஹினி படப்பிடிப்பாளர்கள் குழுவை ஜனாதிபதியே திருப்பி அனுப்பி வைத்தார்.

கடந்த வாரம் இச்சம்பவம் இடம்பெற்றது.

பிரேமதாஸாவின் ஆட்சிக் காலத்தில் ரூபவாஹினி படப்பிடிப்பாளர் குழு ஒன்று ஜனாதிபதி செயலகத்தில் இயங்கி வந்தது.

ஜனாதிபதியின் சந்திப்புகளை இக்குழு தவறாமல் படம் பிடித்து வந்தது.

அதன்படி—

சம்பவ தினமும் அமைச்சர் தொண்டமான் ஜனாதிபதியைச் சந்தித்தபோது அதை படம் பிடிக்க இக்குழு சென்றதாகவும்—

அக்குழுவைக் கண்டு ஜனாதிபதி ஆச்சரியப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

''இந்த நிகழ்ச்சியைப் படம் பிடிக்கத் தேவையில்லை. தேவை ஏற்படும்போது உங்களை அழைப்பேன். இப்போது நீங்கள் போகலாம். போவதற்கு முன்னர் தேநீர் அருந்திவிட்டுச் செல்லுங்கள்'' — இவ்வாறு ஜனாதிபதி விஜேதுங்க ரூபவாஹினி குழுவைப் பார்த்துத் தெரிவித்தார் என்று ''சண்டே ஐலண்ட்'' தகவல் வெளியிட்டிருக்கிறது. (உ-எ)

# உயர் அதிகாரிகள் மட்டத்தில் விரைவில் பெரும் மாற்றங்கள்

கொழும்பு, மே 20

புதிய ஜனாதிபதி பதவி ஏற்ற பின்னர், உயர் அதிகாரிகள் மட்டத்தில் பெரும் மாற்றங்கள் ஏதும் இதுவரை இடம்பெறவில்லை.

ஆனால்—

தற்போது மாகாணசபைத் தேர்தல்கள் முடிவுற்ற நிலையில்—

அனைத்து அதிகாரிகள் மட்டத்திலும் பல மாற்றங்கள் இடம்பெறலாம் என அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள — சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும் — இந்த வாரம் அதிர்ச்சி கொடுக்கும் நடவடிக்கைகள் இடம்பெறலாம் என்று ''சண்டே ஐலண்ட்'' தகவல் வெளியிட்டுள்ளது. (உ-எ)

# அமைச்சர்களிடம் இனி முழுப் பொறுப்பும்

## புதிய ஜனாதிபதி அறிவிப்பு

அமைச்சர்கள் தங்கள் கடமைகளைச் செய்யும் பொறுப்பு அவர்களுக்குத் தற்போது பூரணமாக வழங்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா, நேற்று நடந்த அமைச்சரவையின் முதலாவது கூட்டத்தில் இதனை அறிவித்தார்.

தங்கள் அமைச்சுகளின் செயல்பாடுகளுக்கு அமைச்சர்களே இனி முழுப்பொறுப் பேற்க வேண்டும் என்றும்—

அமைச்சரவைக் கொள்கை சரிவர பின்பற்றப்படுகின்றதா என்பதை மட்டுமே தாம் கண்காணிக்கப் போவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசமைப்பு ரீதியாக இப் பொறுப்பு தமக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-எ)




## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**திரு. வல்லிபுரம் ஜெகதீசன்**

(முன்னாள் பொறியியலாளர் - உர ஆக்கக் கூட்டுத்தாபனம் லங்கா சிமெந்து லிமிட்டெட்)

ஆண்டவன் படைப்பு: **07 10—1946**

ஆண்டவன் அடியில்: **20—05—1987**

அன்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய் எம்முடன் வாழ்ந்து எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் எம்மை வழிநடத்தி மீளாத்துயரில் ஆழ்த்திய அன்புத் தெய்வமே! தங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, தாய், தந்தை,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.

(5926)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**மகாபொல கொடுப்பனவு**

**5ஆம் தவணைப்பணம்**

பல்கலைக்கழக 2 ஆம், 3 ஆம், 4 ஆம், வருட மருத்துவக் கலை, விஞ்ஞான பீடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான 5 ஆம் தவணைப் பண மகாபொல கொடுப்பனவுகளை 20 - 05 - 1993 முதல் வழங்க நிதிக் கிளையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக்கொடுப்பனவு பற்றிய முழு விவரங்களும், அறிவுறுத்தல்களும், பல்கலைக்கழக விளம்பரப் பலகைகளில் இடப்பட்டுள்ளன. இதற்கமைவாகக் கொடுப்பனவை உரித்துடைய மாணவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

பதிவாளர்.

(சி-5145)



பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கம்

# விசேட அறிவித்தல்

எமது சங்கத்தின் தொழிற்பரப்பிலிருந்து இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு வேறு ப.நோ.கூ. சங்கக் கிளைகளுக்கு உங்களது இடம் பெயர்ந்தோருக்கான உணவு முத்திரை வழங்கப்பட்டிருப்பின் உடன் எமது சங்க தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

1993 சித்திரை மாதம் முதல்இரு வாரத்திற்கான விநியோகம் தற்போது வழங்கப்படுகின்றது.

பொது முகாமையாளர்

பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கம்,
சங்கானை மின்தறி ஆலை,
சங்கானை.

(சி/5146)


## ராஜீவ் கொலை வழக்கு

# சந்தேக நபர்கள் எழுதிய 5 கடிதங்கள் குறித்து தகவல்

ராஜீவ் காந்தி கொலை வழக்கின் முக்கிய சந்தேக நபர்கள் விடுதலைப் புலிகள் தலைமைப் பீடத்துக்கு எழுதிய ஐந்து கடிதங்கள் குறித்து அரசு தரப்பு வழக்கறிஞர் ஜேக்கப் டானியல் நேற்றுப் பிரஸ்தாபித்தார்.

கொலையாளி தணுவும், வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சுபாவும் விடுதலைப் புலிகள் இயக்க மகளிர் பிரிவுத் தலைவிக்கு புலனாய்வுப் பிரிவுத் தலைவருக்கும் இக் கொலையைச் செய்து முடிப்பதாக உறுதி தெரிவித்து 1991 ஆம் ஆண்டு கடிதம் எழுதியதாகவும் அவர் சொன்னார். முன்னாள் பிரதமர் வி. பி. சிங் 7-05-1991 அன்று சென்னைக்கு விஜயம் செய்து கூட்டத்தில் கலந்து கொண்டபோது தாங்கள் ஒத்திகை பார்த்ததையும் அவர்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

விடுதலைப் புலிகள் இயக்க அனுதாபியான ஹரிபாபு, ராஜீவ் கொல்லப்படுவதற்கு முன்னர் எடுத்த புகைப்படங்களும் இக்கொலையில் விடுதலைப் புலிகளுக்கு தொடர்பு உண்டு என்பதை நிரூபிப்பதாகவும் வழக்கறிஞர் டானியல் தெரிவித்தார்.

முருகன் நீங்கலாக ஏனைய சந்தேக நபர்கள் அனைவரும் நேற்று விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டிருந்தனர். பலத்த பாதுகாப்பின் மத்தியில் பூந்தமல்லி சிறையில் வழக்கு விசாரணை நடைபெற்றது.

மேல் விசாரணை இம்மாதம் 26 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது. (அ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# ஊட்டச்சத்துக் குறைவினால் அனைவரும் பாதிக்கப்படலாம்

## வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மே 20 "இன்றைய நிலைமையில் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் முதியவர்களும், இளம் பிள்ளைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த நிலை தொடருமானால் ஒரிரு ஆண்டுகளில் எமது மக்கள் அனைவருமே பாதிக்கப்படும் ஆபத்து உள்ளது.''

யாழ். பல்கலைக்கழகச் சுகாதார நிலையம் நடத்தும் கருத்தரங்குத் தொடரின் இரண்டாவது அமர்வில் உரை நிகழ்த்திய வைத்திய நிபுணரும் வைத்திய கலாநிதியுமான எஸ். ஆனந்தராஜா இவ்வாறு கூறினார்.

வைத்திய கலாநிதி எஸ். பி. ஆர். சிர்மாறன் தலைமையில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற இக் கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில், ''எமது வைத்திய நிலையத்துக்கு வரும் மருத்துவ மாணவர்களை இரத்ததானம் செய்யும்படி அனுப்பும்போது அவர்களில் அரைவாசிப் பேர் அதற்குத் தக்க உடல் ஆரோக்கியம் அற்றவர்களாகக் காணப்பட்டுத் திருப்பி அனுப்பப்படும் நிலைமை இங்குள்ளது'' என்று கூறினார்.

எங்கள் பிரதேசத்தில் கிடைக்கக் கூடியனவும், குறைந்த செலவுடன் உட்கொள்ளக் கூடியனவுமான பல மரக்கறிகள், இலை வகைகள், உணவு வகைகள் இருக்கின்றன. ஆனால் நாம் வெளிநாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டுவரும் ரொனிக்குகளையும், மருந்துகளையுமே அதிக விலை கொடுத்து வாங்கி உட்கொள்கிறோம். இரும்புச் சத்துக் குறைவு என்று கூறியதும் குளிகைகளையும், ரொனிக்குகளையும் வாங்கி உண்டால் தான் அதனை நிவிர்த்தி செய்யலாம் என்று எண்ணுகிறோம் அகத்தி, சண்டி, முருங்கை, வல்லாரை மற்றும் இலை வகைகளை உணவில் சேர்க்க எத்தனிக்கிறோம் இல்லை. இரத்தச்சோகை என்றதும் ''சஸ்டேஜின்'' டப்பியை நினைக்கின்றோம். உழுந்து தவிடுள்ள அரிசி, பயறு என்பவற்றின் மூலம் அதனைப் போக்கலாம் என்பது பலருக்குத் தெரிவதில்லை. இந்த நிலை மாற வேண்டும். அப்போதுதான் ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்க முடியும் — என்றும் டாக்டர் ஆனந்தராஜா தெரிவித்தார்.

சகலரையும் தினமும் சிறியளவு இலை, சிறியளவு கரட், சிறியளவு பழம் உண்ணும்படியும் அவர் ஆலோசனை கூறினார்.

பேராசிரியர் பரமேஸ்வரன் ''இன்று எமது சமூகத்தில் நிலவும் ஊட்டச் சத்துணவுக் குறைபாட்டைத் தீர்ப்பதில் யாழ் பல்கலைக்கழக சமூகத்தின் பங்கு'' பற்றியும்—

குழந்தை வைத்திய நிபுணரும் வைத்தியகலாநிதியுமான திருமதி வி. எம். கருணாகரன் ''இன்றைய ஊட்டச் சத்துணவுக் குறைபாட்டால் குழந்தைகளிலும், மாணவர்களிலும் ஏற்படும் பிரச்சினைகள்'' பற்றியும்—

யாழ். மாநகர மருத்துவ அதிகாரி வைத்திய கலாநிதி ஆர். தெய்வேந்திரன் ''இன்றைய சூழ்நிலையில் ஊட்டச் சத்துக் குறைபாட்டால் ஏற்படும் பிரச்சினைகளை குறைப்பதற்கு நாம் என்ன செய்யலாம்.'' என்பது பற்றியும்—

வைத்திய கலாநிதி என். சிவராஜா ''இன்று நிலவும் ஊட்டச் சத்துணவுக் குறைபாட்டில் உள்ளூர் உற்பத்திகளின் பயன்பாடு'' பற்றியும்— உரை நிகழ்த்தினார்கள்.

ஊட்டச்சத்துக் குறைவினால் தமிழர் சமூகத்தில் ஏற்படக் கூடிய பெரும் ஆபத்துக்கள் குறித்து பேச்சாளர்கள் அனைவரும் விவரித்துக் கூறினர்.

(க)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

தொழிலாளர் கல்விச் சான்றிதழ்நெறி 1992/93

ஐந்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவமும், ஆண்டு 9 (தரம் 8) கல்வித் தகைமையும் கொண்ட அரசாங்க/அரச கூட்டுத்தாபன / தனியார் நிறுவனங்களில் அல்லது சுய தொழில் (விவசாயம், மீன்பிடி மற்றும் குடிசைக் கைத்தொழில் உட்பட) ஈடுபட்டுள்ள தொழிலாளருக்கான தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறிக்கு அனுமதி பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விண்ணப்பப்படிவத்தையும், மேலதிக விவரங்களையும், பல்கலைக்கழக சிறாப்பரின் கருமபீடத்தில் ரூபா 15/- செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை நேரில் சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 15/- க்கான காசுக் கட்டளையுடன் சுய விலாசமிடப்பட்டதும், முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ. மீ. x 10 செ. மீ. அளவினதான கடித மேலுறையுடன் உதவிப் பதிவாளர் / தேர்வுகளும் அனுமதிகளும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்குத் தபால் மூலம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசித் திகதி:-
30 — 06 — 1993

பாடநெறியிற் பங்கு பற்றுவோர் எழுத்துத் தேர்வு மூலமாகவும், நேர்முகத் தேர்வு மூலமாகவும் தெரிவு செய்யப்படுவர்.

எழுத்துத் தேர்வு 08 - 08 - 1993 ஞாயிற்றுக் கிழமை மு.ப. 9-00 மணிக்கு நடைபெறும்.

குறிப்பு:
பத்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவம் உடையவர்களிடம் இருந்து ஆண்டு 9 இலும் குறைவான கல்வித் தகைமையுடனும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

- பதிவாளர்.
(சி-5138)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
கலை/வர்த்தகம்/முகாமைத்துவம்
1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம் கல்வியாண்டு ஆண்டு இறுதிப் பரீட்சை 1992

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதி வாய்ந்த சகல வருட மாணவர்களும் 31-05-93 இற்கு முன்பாக யாழ். பல்கலைக் கழகம், பரீட்சைக் கிளையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் மீள் பரீட்சார்த்திகள் தகுந்த கட்டண பற்றுச் சீட்டுடன் தமது விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இக்குறிப்பிட்ட திகதிக்கு பின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

- பதிவாளர்.
(சி-5137)

கொப்பேகடுவ பலியான சம்பவம்:

# விசாரணை நடத்துவதற்கு சர்வதேச நீதியரசர்கள்

## நாளை கொழும்பு வருவர்

அராலித் துறையில் பலியான லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ உட்பட படை அதிகாரிகளின் மரணம் தொடர்பாக விசாரணை நடத்த பொதுநலவாய நடுகளைச் சேர்ந்த மூன்று நீதியரசர்கள் நாளை வெள்ளிக்கிழமை கொழும்பு வரவுள்ளனர்.

கொழும்புப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

திருமதி லாலி கொப்பேகடுவவின் வேண்டுகோளைத் தொடர்ந்து இக்கொலைகள் தொடர்பாக பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த நீதியரசர்களைக் கொண்டு விசாரணை நடத்த மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸா இணக்கம் தெரிவித்திருந்தார் என்பது தெரிந்ததே. (உ-எ)

Computer Programming
in
BASIC Language
4 MONTHS
திங்கள், புதன் வகுப்புகள்
ஆரம்பம்: 24 - 05 - 1993
10-30 மணி
Lectures By: S. P. Sivapathasundaram
M. I. D. P. M. (Lond)

- கட்டணம் தவணை முறையில்
- இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
- கூடிய செய்முறைப் பயிற்சி
- பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்.

C. I. M. A., I. A. B. LOTUS 1-2-3
SHORT - HAND & TYPING நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Pioneers in Computer Education)
16, 3rd CROSS STREET, JAFFNA.
(சி 5143)

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





**விநாயகமூர்த்தி சதாசிவம்**
(இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர்)
அன்னையின் மடியில்: 04 — 02 — 1922
தரணியின் மடியில்: 05 — 06 — 1986

**சதாசிவம் சிவானந்தமூர்த்தி**
அன்னையின் மடியில்: 04 - 05 — 1953
தரணியின் மடியில்: 11 - 03 — 1986

திதி: 20 — 05 — 1993

வருடங்கள் எத்தனை தான் உருண்டாலும்
உங்கள் நினைவுகள் எம் மனதை விட்டகலா
ஆண்டுகள் ஆறு மறைந்தாலும்
ஆறாத்துயரம் இன்னும் மறையவில்லை
மைந்தன் மறைந்த செய்தி கேட்டு
மாதங்கள் மூன்றிற்குள் - மறைந்த
தந்தையையும் மறப்போமா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:
— குடும்பத்தினர்.

மூத்ததம்பியார் வளவு,
வதிரி, கரவெட்டி.

(25737)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## திருமண சேவை

யாழ். இந்து, வயது 36, பரணி நட்சத்திரம், சிங்க லக்கினம், 7இல் செவ்வாய், கிரகபாவம் 39/16. கொழும்பில் அரச கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் அழகிய பெண்ணுக்கு மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும். இல. 904, மே/பா உதயன்

(6190)

## மணமகன் தேவை

25 வயதுடைய சைவசமய, A/L படித்த மணமகளுக்கு தமிழீழத்தில் தொழில் புரியும் உயர்கல்வியும், நற்குணமும், 5' 6'' திற்குக் குறையாத உயரமும் உள்ள மணமகன் தேவை. சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். இல. 903, மே/பா உதயன்.

(6187)

## மணமகள் தேவை

யாழ். இந்து, டாக்டர். வயது 35, உயரம் 6 அடி. தனியாக கிளினிக் வைத்திருக்கும் மணமகனுக்கு டாக்டர் மணமகள் தேவை. சீதனம் பெற்றோர் விருப்பம். தொடர்பு: இல. 528, மே/பா உதயன்.

(25731)

## இலவச திருமண சேவை

30 வயது. திருவோணம், கிரகபாவமற்ற சுவிஸ் மணமகனுக்கு மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். உள்நாடு, வெளிநாடு மணமக்களுக்கு; விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி.

(25711)

## சீயாக்காய் பவுடர்

மீண்டும் மலிவு விலையில் விற்பனையாகிறது பேன், சொடுகு, அழுக்கு இல்லாமல் செய்யும் காவேரி சீயாக்காய் பவுடர் கண் குளிர்மைக்கு, கூந்தல் வளர்ச்சிக்கு பாவியுங்கள். தயாரிப்பாளர்கள்: கந்தசாமி அன் சன்ஸ், ஆடியபாதம் வீதி, நல்லூர்.

(25333)

## பெயர் மாற்றம்

யாழ். நகரைவசிப்பிடமாகக் கொண்ட ''கணேசா'' ஆகிய எனது பெயர் K.V Kanesalingam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன். K.V. Kanesalingam, 298, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(25537)

## கோழித்தீன் வெற்றுபக்கற்

கோழித்தீன் வெற்றுப்பக்கற் தேவை. மில்க்வைற்.

(சி-5134)

## தவறிவிட்டது

சங்கானையில் இருந்து மாசியப்பிட்டி சுன்னாகம் ஊடாக புத்தூர் சென்று பருத்தித்துறை வீதி ஊடாக சரவெட்டிக்குச் செல்லும் வழியில் 12-05-93 அன்று சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நமசிவாயம் பாலச்சந்திரன் (ஆசிரியர்) சங்கானையில் (ப. நோ. கூ. சங்கத்திற்கு அருகில்) தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

[25736]

---

அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்

# பதவி வெற்றிடம்

இவ் வைத்தியசாலையில் அமைய ஆங்கில சுருக்கெழுத்தாளர் (CASUAL STENOGRAPHER) பதவி ஒன்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:-**

1. க. பொ. த. (சா/த) பரீட்சையில் அல்லது சி. பொ. த பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ்மொழி, ஆங்கிலமொழி கணிதம் உட்பட குறைந்தது நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.
2. அரசாங்க தொழில் நுட்பக் கல்லூரியில் ஆங்கில சுருக்கெழுத்து, தட்டெழுத்து பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

   அல்லது

   க. பொ. த (சா/த) சி. பொ. த. பரீட்சையில் சுருக்கெழுத்து பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.
3. 31 - 05 - 93 இல் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவராகவும், நாற்பது வயதுக்கு உட்படவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் எனது பணிமனையில் 31 - 05 - 93 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பதாரர்கள் பின்பு என்னால் அறிவிக்கப்படும் திகதியில் எனது பணிமனையில் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு அமைய அடிப்படையில் நியமனமும், அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ள புதிய சம்பள விகிதப்படி சம்பளமும் வழங்கப்படும்.

பணிப்பாளர்,

வைத்திய கலாநிதி செல்வி என் கனகரட்டினம்

(இ-5141)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## செல்வி இராஜினி இரட்ணம்

(2ஆம் வருட உயிரியல் விஞ்ஞானப் பிரிவு மாணவி, யாழ். பல்கலைக்கழகம்)

தோற்றம்: 10 — 03 — 1969

மறைவு: 20 — 04 — 1993

இந்த
நந்தவனப் பூக்கள் எல்லாம்
கர்ப்பக்கிரகம் நோக்கி
காத்துக்கிடக்கையில்
கல்லறையை அலங்கரிக்கும்
ஓர் பூ.........

எங்கள்
மலர்க் கொத்திலிருந்தும் வீழ்ந்துவிட்ட - அம்
மலர் இல்லாவிடினும் - அதன்
மணத்தைத் தேடி......
காற்று வெளியிடையே கனக்கும் கவலையுடன்!
நேற்று ஆகிவிட்ட உன் நினைவுச் சுமைகளுடன்!

ஓ!
ப்ரிய ஸ்னேகிதி......
இனியவளாய் எம் நெஞ்சில்
இடம் பிடித்துக் கொண்டவளே - உன்
இழப்பிற்கு ஈடு.........?

2 ஆம் வருட உயிரியல் விஞ்ஞானப் பிரிவு
மாணவர்கள்,

யாழ். பல்கலைக்கழகம்,

(20735)

---

# ஸ்கந்த ஹோமம்

(யாக பூசை)

**இடம்:** சாவகச்சேரி பெரிய மாவடி,
கந்தசுவாமி கோயில்

**காலம்:** நாளை 21 - 05 - 1993
(வெள்ளிக்கிழமை)

**நிகழ்ச்சிகள்:**

காலை 9-00 மணி
- ★ ஸ்கந்த ஹோமம் (யாக பூசை)
- ★ 25 கலச சங்காபிஷேகம்
- ★ கார்த்திகை உற்சவம்

மாலை 7-00 மணி
- ★ விசேட பூசை ஆராதனைகள்
- ★ தீப பூசை
- ★ சுவாமி வீதி திருவுலா

அடியார்கள் அனைவரையும் யாக பூசையில் கலந்து கந்தன் அருளைப் பெற வேண்டுகின்றோம்.

தர்மகர்த்தாவும்,
உபயகாரரும்.

(25724)

---

# மாபெரும் மாட்டுவண்டி சவாரிப் போட்டி

அச்செழு சித்தி விநாயகர் விளையாட்டுக் கழக வளர்ச்சி நிதிக்காக 23 - 05 - 1993 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் A B C என மூன்று பிரிவுகளாக நீர்வேலி சவாரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பளிப்பு: ரூபா 10/-

அச்செழு சித்தி விநாயகர்
விளையாட்டுக் கழகத்தினர்.

விளம்பர அன்பளிப்பு:

நியூ டிஸ்கோ சலூன்- நீர்வேலி.
(குரும்பசிட்டியில் முன்னர் இயங்கியது தற்போது நீர்வேலிக்கு இடமாற்றப்பட்டுள்ளது.)

(25734)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: 14 — 08 — 1933



உதிர்வு: 21 — 04 — 1993

## திருமதி இரத்தினம் சின்னராசா

ஆறாத்துயரில் எம்மை மூழ்க வைத்து மீளாத் துயில் கொண்ட தெய்வமே! பாசந்தனைப் பொழிந்து, நேசந்தனை வளர்த்துக் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் நேரில் கலந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், பல வழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 20-05-93 ஆனைக்கோட்டையிலும், சபிண்டீகரணம் நாளை 21-05-93 வெள்ளி எமது இல்லத்திலும் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

- அன்னாரின் குடும்பத்தினர்.

''சிவஸ்தான்'',
நவாலி றோட்,
ஆனைக்கோட்டை.

(25685)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஊட்டச்சத்து குறைபாடு

போரினால் உண்டாகி வரும் பாதிப்புகளில் ஊட்டச் சத்துக் குறைபாடும் ஒன்றாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஊட்டச் சத்துக் குறைபாடு பெரும் ஆபத்தான நிலைக்கு வந்திருப்பதாக வைத்திய வட்டாரங்கள் சிவப்புக் கொடி காட்டி வருகின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சுகாதார நிலையத்தினர் கடந்தவாரம் ஊட்டத்சத்துக் குறைபாடு சம்பந்தமான கருத்தரங்கு ஒன்றை நடத்தினர். அந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்ட வைத்திய நிபுணர்களும், வைத்தியத்துறை சார்ந்த புத்திசீவிகளும் ஊட்டச்சத்துக் குறைவினால் உருவாகி உள்ள ஆபத்தை எடுத்து விளக்கினர்.

ஊட்டச்சத்துக் குறைபாடு எமது மண்ணின் வருங்காலப் பிரசைகளான குழந்தைகளையும், மற்றும் முதியவர்களையும் பெருமளவில் பாதித்துள்ளதாக எடுத்துச் சொன்னார்கள். யுத்த நிலை தொடர்ந்தால், பொருளாதாரத் தடை தொடர்ந்தால், உணவுப் பற்றாக்குறை நீடித்தால் இன்னும் ஒரிரு வருடங்களில் ஊட்டச் சத்தின்மை சகல வயதினரையும் பாதித்துப் பேரழிவுக்கு வகை செய்யலாம் என்றும் எச்சரித்தார்கள்.

மனித உடம்பு இயங்குவதற்கு மூலாதாரமானது சக்தி. அந்த சக்தியை உடலில் உற்பத்தி செய்பவை காபோஹைதரேத்துகள், புரதம், கொழுப்பு, கனியப்பொருள்கள், விட்டமின்கள் என்பன ஆகும். இந்த ஐந்து மூலப்பொருள்கள் குறிப்பிட்ட அளவில் உடலில் உணவு மூலம் செறிந்தால் தான், இயக்கத்துக்குரிய சக்தியை (கலோரியை) ஆக்கலாம்.

ஊட்டம் செறிந்த சம உணவு உட்கொள்ளாத பட்சத்தில் உடல் இயக்கத்துக்கு வேண்டிய சக்தி பிறக்காது. சக்திக் குறைபாடு பலவித நோய்களுக்கும், உபாதைகளுக்கும் இட்டுச் செல்லும், மரணம் சம்பவிக்கவும் ஏதுவாகும்.

எனவே ஊட்டச்சத்து நிறைந்த உணவு, சமஉணவு என்பன ஒவ்வொரு மனிதனுக்கும், அவனது உடல் இயக்கத்துக்கு அத்தியாவசியமானவை; தவிர்க்க முடியாதவை. உணவுப் பற்றாக்குறை நிலவும் போதும், சம உணவை எப்படி ஆக்குவது, எங்கிருந்து பெறுவது என்பன தெரியாத அறியாமை நிலவும் போதும் ஊட்டச்சத்துக் குறைபாடு தலைதூக்குகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டை ஊட்டச் சத்துக் குறைபாடு தாக்குவதற்கு மேலே குறிப்பிட்ட இரண்டு காரணிகளும் ஏதுவாகின்றன. எனினும் எமது பிரதேசத்திலேயே கிடைக்கக் கூடிய, உற்பத்தி செய்யக் கூடிய, சத்துணவுகளை பற்றிய அறிவில்லாமையும், எங்கள் பாரம்பரிய உணவுப் பழக்கங்களைப் பேணுவதில் அக்கறை காட்டாமையும் ஊட்டச் சத்துக் குறைபாட்டுப் பிரச்சினைக்கு அதிகளவில் பங்களிக்கிறது என்றே கூறலாம்.

போர்க் கால சூழ்நிலையில் உணவுப் பற்றாக்குறை உண்டாவது இயல்பு. வெளியில் இருந்து வரும் உணவில் இருந்து ஊட்டச் சத்தைப்பெறுவதற்கும், சம உணவைத் தேடுவதற்கும் காத்திருக்கக் கூடாது. எமது பிரதேசத்தில் விளையும் தானியங்கள், மரக்கறிகள், இலைவகைகள், கடலுணவுகளைக் கொண்டு ஊட்டம் செறிந்த சம உணவுகளைத் தயாரிக்க பழகிக் கொள்ள வேண்டும். எமது முன்னோரின் உணவுப் பழக்கங்களை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வந்தால் ஊட்டக் குறைவினால் உண்டாகக் கூடிய நாசத்தைத் தடுக்கலாம்.

## தையிட்டியில் பெரும்பாலான வீடுகள் அழிந்த நிலையில்

### விடுவிக்கப்பட்டவர் தகவல்

யாழ்ப்பணம், மே 20

தையிட்டிப் பகுதியில வீடுவளவுகள், வீதிகள் எங்கும் பற்றைக்காடுகளாகக் காணப்படுகின்றன பயன்தரும் மரங்கள் எல்லாம் அழிந்து போய் விட்டன. அங்குள்ள பெரும்பாலான வீடுகளின் கூரைப் பகுதிகள் அகற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு தையிட்டிப் பகுதியின் நிலையை விவரித்தார் அங்கிருந்து நேற்று விடுவிககப்பட்ட யாழ். பணிக் கூட்டு ஒழுங்கையைச் சேர்ந்த இளையதம்பி தெய்வானை (வயது 69).

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

தையிட்டிப்பகுதியில் சுமார் 20 வீடுகள் வரையே எஞ்சியுள்ளன. ஏனைய வீடுகளில் பெரும்பாலானவற்றின் கூரை, ஜன்னல், கதவு, நிலை என்பன அகற்றப்பட்டும், வீடுகள் இடிந்த நிலையிலும் காணப்படுகின்றன. வயோதிபர்கள் தங்கியிருப்பதால் மட்டுமே எஞ்சிய வீடுகள் பாதுகாப்பாக இருக்கின்றன.

1990, அக்டோபர் மாதத்தில் அப்பகுதிக்கு இராணுவம் வந்தபோது வீடுகள் சூறையாடப்பட்டன வயோதிபப் பெண்களிடம் இருந்து கூட நகைகள் பறிக்கப்பட்டன.

அங்கு எஞ்சியுள்ளவர்கள் அங்கிருந்து வெளியேறவே விரும்புகின்றனர். சிலர் தங்கள் வீடுகளைப் பாதுகாப்பதற்காக அங்கு இருக்கின்றனர்.

15 நாட்களுச்கு ஒரு தடவை சில உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. இரவில் விளக்கு ஏற்ற மண்ணெண்ணெய் கிடையாது. இருள் சூழும் முன்பே வேலைகளை முடித்துக் கொண்டு விடுவோம் -இவ்வாறு அவர் தெரிவித்தார்

(இ 162-5)

## ஓய்வூதிய வவுச்சர் வரவில்லை

யாழ்ப்பாணம், மே 20

யாழ். மாவட்ட ஒய்வூதியர்களின் மே மாதத்துக்கான பென்ஷன் வவுச்சர்கள் 'குமண' கப்பலில் எடுத்து வரப்படவில்லை.

அடுத்து பருத்தித்துறைக்கு வரவிருக்கும் 'குமாரி' கப்பலில் அவை இங்கு எடுத்துவரப் படும்என கொழும்பில் இருந்து கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது.

(இ-5)

## லலித்துடன் சந்திரிக்காவையும் கொல்லத் திட்டமிடப்பட்டதாம்

கொழும்பு, மே 20

தன்னையும் முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியையும் கொல்லும்படி உயர் அரசியல்வாதி ஒருவர் உத்தரவிட்டிருந்தார் என்று திருமதி சந்திரிகா குமாரணதுங்கா செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து—

கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த சில பிரபல அரசியல் வாதிகளிடமிருந்து வாக்கு மூலங்களைப் பொலீஸார் பதிவு செய்து கொண்டனர்.

கொல்லும் உத்தரவு கொழும்பில் வைத்து கடந்த மாதம் 20 ஆம் திகதி வழங்கப் பட்டதாகவும் திருமதி குமாரணதுங்கா பொலீஸ் முறைப் பாட்டில் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக தகவல் தந்தவரின் பெயரைத் தாம் வெளியிட விரும்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தகவல் தந்தவர் இக் கொலைப் பயமுறுத்தல் பற்றி அத்துலத் முதலியையும் உஷார்ப்படுத்தியிருந்தார் என்றும் அவர் தெரிவித்தார்.

தனது முறைப்பாட்டில் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த பொலீஸ் அதிகாரி ஒருவர், போட்டிக் கட்சி ஒன்றின் இரு அரசியல் வாதிகள், அவர்களின் இரு ஆதரவாளர்கள் ஆகியோரின் பெயர்களை சந்திரிக்கா தனது முறைப் பாட்டில் பிரஸ்தாபித்துள்ளார். அரசியல் வாதிகளில் ஒருவர் கம்பஹா மாவட்டத்தில் மாகாணசபை வேட்பாளராகப் போட்டியிட்ட ஒரு பெண் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 30 ஆம் திகதி மிரிகமவில் உள்ள தேர்தல் அலுவலகத்திற்கு தாம் விஜயம் செய்து, சில கூட்டங்களில் பேசவிருந்த போது இக் கொலை உத்தரவு நிறைவேற்றப்பட விருந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முறைப்பாட்டில் தாம் பிரஸ்தாபித்த பொலீஸ் அதிகாரி, தம்மைச் சுடுவதற்குத் தேவையான பிரவுனிங் பிஸ்டலை வழங்க முன்வந்தார் என்றும்—

மற்றைய இரண்டு கட்சி ஆதரவாளர்களும் சுடுவதற்கு தேவையான ரவைகளை வழங்க முன்வந்தனர் என்றும் சந்திரிக்கா தெரிவித்துள்ளார்.

(உ-எ)

## எயர் லங்கா பணிப்பாளர் சபை:

## ஜே. ஆர். எவரையும் சிபார்சு செய்யவில்லையாம்

கொழும்பு, மே 20

எயர் லங்கா பணிப்பாளர் சபைக்கோ, வேறு அரச கூட்டுத்தாபனங்களுக்கோ பணிப் பாளர்களாக நியமிக்கும்படி எவரையும் நான் சிபார்சு செய்யவில்லை.

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இத்தகவலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா செய்தியாளர் மாநாட்டில் நேற்று வெளியிட்டார். (இ-எ)

## தனிச் சிங்களத்தில் வந்த உணவு முத்திரைப்படிவம்!

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களுக்கு கொழும்பில் இருந்து தனிச் சிங்களத்தில் உணவு முத்திரை விநியோகம் தொடர்பான படிவங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

வறுமை நிவாரண 8ஆவது தொடர் உணவு முத்திரைகளை விநியோகிப்பதற்குரிய உணவு முத்திரை விவரணத் தாள்களே தனிச்சிங்களத்தில் அச்சடிக்கப்பட்டுள்ளன

இந்தப் படிவங்களையே யாழ். செயலக சமூகசேவைப் பகுதியினர் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர். [ஓ-175]

## புலிகளின் அச்சுறுத்தலை சமாளிக்க

## கடற்படையை பலப்படுத்தும் நடவடிக்கை தீவிரம்

கடற்புலிகளின் அச்சுறுத்தல் நடவடிக்கைகளைச் சமாளிக்க ஸ்ரீலங்கா கடற்படையைப் பலப்படுத்தும் முயற்சியில் ஸ்ரீலங்கா கடற்படை தலைமை தீவிரம் காட்டி வருகிறது.

புதிதாக பயிற்சி அளிக்கப்பட்ட 250 கடற்படையினர் அண்மையில் படை நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

கடந்த 12ஆம் திகதி திருகோணமலையில் இது தொடர்பாக இடம்பெற்ற நிகழ்ச்சியில், கிழக்கு பிராந்திய தளபதி கெமடோர் சி.கே. தஸநாயக்கா கலந்து கொண்டார்.

அவர் அங்கு பேசுகையில்—

கடற்புலிகளின் அச்சுறுத்தல் பெருமளவில் அதிகரித்துக் காணப்படுவதாகவும், கடற்புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் புதிதாக பயிற்சியளிக்கப்பட்டவர்கள் ஈடுபடுத்தப்படுவர் என்று தெரிவித்தார். ஓ-3)

## ஜெயலலிதாவின் பதவி பறிபோனால்

## எம். எல். ஏக்கள் 120 பேர் வெளியேறத் தயாராம்!

சட்டசபை உறுப்பினர் பதவியில் இருந்து முதலமைச்சர் ஜெயலலிதாவை தேர்தல் கமிஷன் நீக்கும் பட்சத்தில்—

அ.தி.மு.கவில் இருந்து 120 எம். எல். ஏக்கள் வெளியேறத் தயாராக உள்ளனர் என்று சென்னையில் பேசப்படுகின்றது.

இதனைத் தவிர்க்கும் ஒரு முயற்சியாகவே ஜெயலலிதா தமது அமைச்சரவையை விரிவு படுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஊழல் குற்றச்சாட்டுகள் புரிந்தார் என்ற காரணத்துக்காக சட்டசபை உறுப்பினர் பதவியில் இருந்து ஜெயலலிதாவை விலக்க வேண்டும் என்று கோரும் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியின் மனு மீதான தமது முடிவை தேர்தல் ஆணைக்குழு எந்த நேரமும் வெளியிடலாம் என்ற நிலை நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம்,

இருபாலை வேலி ஸ்ரீபத்திரகாளி அம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 3ஆம் திகதி காலை தேர்த் திருவிழாவும், மறுநாள் காலை தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

(ஒ)

o o o

ஏழாலை மே 20

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் கோவில் தேர்த்திருவிழா இன்றுநடைபெறுகிறது. முற்பகல் பத்து மணிக்கு சிவபெருமான் தேரில் பவனிவந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார்.

(அ-45)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 20

"உதயன்" கிண்ணத்துக்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு :—

★ கண்ணகி வி. க. 'ஏ' அணி எதிர் சொலின்ஸ் வி. க. அணி

★ டயமன்ஸ் ''ஏ'' அணி எதிர் சிவானந்தா ''பி'' அணி

## மீட்பு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், மே 20

குடாநாட்டில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மூன்று இடங்களில் தமிழீழ மீட்பு நிதி சேகரிப்பு இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரை நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில், வலிகாமம், மற்றும் தீவக உ. அ. அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும்—

முற்பகல் 11-30 மணி தொடக்கம் 12-30மணிவரை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் பருத்தித்துறை, கரவெட்டி, வடமராட்சி கிழக்கு ஆகிய உ. அ. அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும்—

பிற்பகல் 3 மணி தொடக்கம் 4 மணிவரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில், சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி உ. அ. அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் தமது மீட்பு நிதிக் கடனைச் செலுத்தலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ)

### கொமாண்டோப் ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பிரிவு, பிரதமர் பாதுகாப்புப் பிரிவு, பொலீஸ் கொமாண்டோப் பிரிவு ஆகியவற்றை விட—

அமைச்சர்களுக்கும் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கும் பாதுகாப்பு வழங்குவதில் இரு பாதுகாப்புப் பிரிவுகள் தனித்தனியாக ஈடுபட்டிருக்கின்றன.

[உ-எ]

### ஜனாதிபதியின் .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல பொலீஸ் அதிகாரிகளும் இப் பிரிவுகளில் இருந்து விலகும் விருப்பத்தை வெளியிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப் படுகின்றது.

ஜனாதிபதி பிரேமதாஸா குண்டு வெடிப்பில் கொலையுண்ட சமயம், அவருக்குப் பாதுகாப்பாகச் சென்ற பல சிரேஷ்ட அதிகாரிகளும் உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே.

(உ-எ)

### தையிட்டியில்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிப் பகுதியில் சிக்குண்டிருப்போரில் மேலும் சிலர் நேற்று இவர்களுடன் விடுவிக்கப்பட இருந்ததாகவும்—

கடைசி நேரத்தில் அவர்களைக் கப்பலுக்குக் கூட்டிவருவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அவர்கள் வரமுடியாது போனதாகவும் தெரிய வந்தது.

(இ-5 162)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ் கொலை வழக்கு முக்கிய சாட்சி தப்பினார்!

சென்னை, மே 20

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முக்கிய சாட்சியான சார்ள்ஸ் நவாஸ் நேற்று முன் தினம் இரவு சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள தனி அகதி முகாம் சிறையில் இருந்து தப்பி விட்டார் என அறிவிக்கப்படுகிறது.

இது குறித்து காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது

இலங்கைத் தமிழரான இவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தீவிர ஆதரவாளர் என்றும் —

அவர் சிறையின் சுவரைத் தாண்டிக் குதித்தோ அல்லது கூரை ஓடுகளைப் பிரித்தோ தப்பி இருக்கலாம் என்றும் பொலீஸார் கூறினார்கள்.

நவாஸ் எப்படி தப்பினார் என்பது விரிவான விசாரணை ஒன்றின் மூலமே தெரியவரும் என்று பொலீஸார் கூறினார்கள்.

(இ-எ)

## மாவீரர்கள் நினைவுக்கூட்டம்

தென்மராட்சி, மே 20

மே மாதத்தில் வீரமரணமடைந்த சாவகச்சேரி வட்டப் பகுதியைச் சேர்ந்த மாவீரர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று வியாழக்கிழமை இரவு 7.00 மணிக்கு சரசாலை வடக்கு ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் வட்டப் பொறுப்பாளர் திரு. தமிழன் தலைமையில் நடைபெறும்.

கூட்ட இறுதியில் தென்மராட்சி கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

(இ-117)

## இந்தியா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கனவே வெளியாகி விட்டன.

செய்தியாளர்களின் மூன்று முக்கிய கேள்விகளுக்கு ஜனாதிபதி பின்வருமாறு பதிலளித்திருந்தார்;-

கேள்வி: நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களை அடுத்து விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தை குறித்து புதிய முயற்சி எதனையும் மேற்கொண்டுள்ளதா?

ஜனாதிபதி; இல்லை அப்படி ஒரு கோரிக்கையும் இல்லை.

கேள்வி: இப் பிரச்சினைக்கு தீர்வு காணுவதற்கு இந்தியத் தலையீட்டை அனுமதிக்க நீங்கள் தயாராகஉள்ளீர்களா?

ஜனாதிபதி: அந்த நேரத்தில் அது பற்றி நான் சிந்தித்து, எது பொருத்தமானதோ அதன்படி முடிவு செய்வேன்.

கேள்வி: எதிர்க் கட்சிகளுடன் பேச்சுகளை அரசு ஆரம்பித்துள்ளதா?

ஜனாதிபதி: எந்த விஷயம் குறித்தும் பேச நாம் எப்போதும் தயாராக உள்ளோம்.

[அ·எ]

# அரசியலில் முக்கிய சக்தி இ.தொ.கா என்பது நிரூபணம்

### அமைச்சர் தொண்டா பெருமிதம்

கொழும்பு, மே. 20

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், நாட்டின் அரசியலில் முக்கிய சக்தியாக மீண்டும் தன்னைக் காட்டியுள்ளது.

மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் குறித்து கருத்து வெளியிட்டபோது, இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான் முன்கண்டவாறு தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர் வாழும் பகுதிகளில் 50 சதவீதத்துக்கு அதிகமான வாக்காளர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்து உள்ளனர். இதன் மூலம் மலையகத் தமிழ் வாக்காளர் தமது ஒன்றுபட்ட சக்தியைக் காட்டி உள்ளனர். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பின்னால் தான் மலையகத் தொழிலாளர்கள் உள்ளனர் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இ. தொ. காவில் பிளவு ஏற்படுத்த முயன்றவர்களுக்கு இத் தேர்தல் தகுந்த பாடம் படிப்பித்துவிட்டது. மக்கள் என் பக்கமே என்று தேர்தலில் தீர்ப்பு கூறப்பட்டுள்ளது— இப்படி திரு. தொண்டமான் கூறினார். (ஒ-எ)

## இலங்கை திரும்பவிருக்கும் அகதிகளை ஏற்றிச் செல்ல ஐ. நா. கப்பல்கள் வழங்கும்

சென்னை, மே 20

தமிழகத்தில் இருந்து இலங்கைக்குத் திரும்பத் தயாராக இருக்கும் ஈழத் தமிழ் அகதிகளை ஏற்றிச் செல்ல ஐ. நா. சபையின் அகதிகளுக்கான தூதரகம் கப்பல்களை வழங்க முன்வந்துள்ளது.

மாநில மறுவாழ்வுத்துறை சிறப்பு ஆணையாளர் சி. எம். இராமதாஸ் இத் தகவலை வெளியிட்டார்.

இராமேஸ்வரத்தில் இருந்தும் சென்னையில் இருந்தும் ஈழத் தமிழ் அகதிகளை ஏற்றிச் செல்வதற்கு இக் கப்பல்கள் பயன்படுத்தப்படும் என்றும் அவர் சொன்னார்.

மத்திய அரசிடம் இருந்து இதற்கான அனுமதி கிடைத்தவுடன் அகதிகள் கப்பலில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறினார். (ஒ-எ)

## கொலையுண்டவர் கச்சாய் வாசி

தென்மராட்சி, மே 20

பிரேமதாஸா கொலையுண்ட தினமான மே மாதம் முதலாம் திகதி கொழும்பில் கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர் கொடிகாமம், கச்சாய் தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி மயில்வாகனம் (வயது 32) என்று தெரிவிக்கப்படுகிறது.

இரு பிள்ளைகளுக்குத் தந்தையான அவர் நான்கு ஆண்டுகள் மத்திய கிழக்கு நாடு ஒன்றில் கடமையாற்றி விட்டு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்து இறங்கி ஆட்டோ மூலம் கொழும்பு சென்று கொண்டிருந்த சமயம் இனந்தெரியாதோரினால் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.

இவரது சடலம் கொழும்பிலேயே அடக்கம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

## தீர்மானிக்கும்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லாம்.

''டெய்லி நியூஸ்'' ஆசிரியர் மெனிக் டி சில்வா பி.பி.ஸி. சிங்களச் சேவைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆயினும் நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் அரசு தோற்கடிக்கப்பட்டால் நிலைமை மாறி விடும் என்றும் அவர் தெரிவித்தார்.

வடமேல் மாகாண ஆளுநராக மொண்டேகு ஜயவிக்கிரமவும் தென்மாகாண ஆளுநராக பாக்கீர் மாக்காரும் கடமையாற்றுவது குறிப்பிடத்தக்கது.

(இ-6)

# பிரேமாவின் பல திட்டங்களை விஜேதுங்கா கைவிடுகிறார்

கொழும்பு, மே 20

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவினால் உருவாக்கப்பட்டு பெரும் செலவில் ஆடம்பரமாக நடைமுறைப் படுத்தப்பட்டு வந்த திட்டங்கள் பலவற்றை நிறுத்திவிட புதிய ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா முடிவு செய்திருக்கிறார்.

அரச நிகழ்ச்சிகள் பெரும் செலவில் ஆடம்பர வைபவங்களாக நடத்தப் படுவதற்கு உடனடியாகத் தமது அரசு முற்றுப்புள்ளி வைக்கிறது என்றும் அவர் அறிவித்துள்ளார்.

### கம்உதாவ நிறுத்தம்

ஆண்டுதோறும் நடைபெறும் கம்உதாவ கொண்டாட்டங்கள் இனிமேல் நடைபெறமாட்டா என்று கண்டியில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜூன் 23 ஆம் திகதி மிகிந்தலையில் எளிமையான நிகழ்ச்சிகளுடன் கம் உதாவ வைபவங்கள் நடைபெறும் என்றும் அதன்பின்னர் கம் உதாவ நடத்தப்படமாட்டாது என்றும் அவர் மேலும் அங்கு தகவல் வெளியிட்டுள்ளார்.

### ஜனாதிபதி இடம்பெயர் சேவை

பிரதேச செயலகங்கள் அமைக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதி இடம்பெயர் சேவையை நடத்தும் தேவை ஏற்படாது என்றும்—

எனினும் எதிர்வரும் ஜூலை மாதத்தில் மட்டக்களப்பில் நடைபெறவுள்ள ஜனாதிபதி இடம்பெயர் சேவையில் தாம் கலந்து கொள்ளப் போவதாகவும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தெரிவித்தார்.

இதேவேளை —

அரச நிகழ்ச்சிகள் பெரும் செலவில் தமாஷாக்களாக நடத்தப்படுவதற்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப் படுகிறது என்றும் —

இது விடயத்தில் அரசு திடமாகச் செயற்படும் என்றும் ஜனாதிபதி நேற்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அறிவித்தார்.

அபிவிருத்தித் திட்டங்கள் எதுவும் சம்பிரதாய பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட வேண்டியிருப்பின் அல்லது திறக்கப்பட வேண்டியிருப்பின் அந்த நிகழ்ச்சிகளை எளிமையான — சிக்கனமான முறையில் நடைமுறைப் படுத்த வேண்டும் என சம்பந்தப்பட்டோருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

திரை மறைவில் இருந்து கொண்டு பணிபுரியும் ஜனாதிபதி விஜேதுங்காவின் அரசியல் மறைந்த ஜனாதிபதி பிரேமதாசவின் கோலாகல— கேளிக்கை — ஆர்ப்பாட்ட அரசியலுக்கு முற்றிலும் வேறுபட்டதாகக் காணப்படுகிறது என பி. பி ஸி. தனது செய்திக் கண்ணோட்டத்தில் தெரிவித்தது.

பேரணிகளையும், மாபெரும் விழாக்களையும் நடத்துவதில் மறைந்த ஜனாதிபதி பிரேமதாச ஆர்வம் உடையவராக இருந்தார். ஆனால் புதிய ஜனாதிபதி விஜேதுங்கா நேற்று விடுத்த கொள்கை அறிக்கையில் பிரேமதாசாவின் இலட்சியங்களின் அடிப்படையில் வரையப்பட்ட கொள்கைகளை மட்டும் தமது அரசு தொடரும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதே நேரத்தில் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் பார்வையில் எப்போதும் பட்டுக்கொண்டே இருக்க விரும்பி அதற்காகவே மிகுந்த பொருட் செலவில் கம் உதாவ என்ற பெயரில் பிறந்த நாள் விழாக்கள் கொண்டாடி வந்த மறைந்த ஜனாதிபதியின் வழியை புதிய ஜனாதிபதி பின்பற்றப் போவதில்லை என்பது தெளிவாகியுள்ளது,

பணத்தை விரயமாக்குவது சமுதாயத்துக்கு இழைக்கும் குற்றமாகும் என்று புதிய ஜனாதிபதி நேற்றுக் கூறியது பிரேமதாஸாவை மறைமுகமாக விமர்சிக்கும் கூற்றாகவே ஒலிக்கிறது—என்று பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது

(இ-எ-6-5)

## தொலைபேசி ஒற்றுக் கேட்பதை நிறுத்த உத்தரவு

தொலைபேசி உரையாடல்களை ஒற்றுக் கேட்பதை உடனடியாக நிறுத்தும் படி புலனாய்வுப் பிரிவினருக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

ஜனாதிபதியாக டி பி. விஜேதுங்கா பதவி ஏற்றதைத் தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(இ-எ)

## முக்கிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாய நடவடிக்கையின் ஒரு பகுதியாக முக்கிய அரசாங்க 'இலக்குகள்' மீது துணிகரத் தாக்குதல்கள் பல நடத்தப்படலாம். இவ்வாறு பாதுகாப்புத்துறை மூத்த அதிகாரிகள் அச்சம் கொண்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் நிபுணத்துவம் மற்றும் திறமைகளை வைத்துப் பார்க்கையில்—

முக்கிய பிரபலஸ்தர்களைப் பாதுகாப்பது முக்கியமானதும் கடினமானதுமான வேலையாக மாறியுள்ளது – என்று பாதுகாப்பு அதிகாரி ஒருவர் வெளிப்படையாகத் தெரிவித்தார்.

அச்சம் தான் முக்கியமானது என்றும் அந்த அதிகாரி கூறினார். — இவ்வாறு அந்தப் பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. [அ·எ]

## சிறிமாவோ...

(1 ஆம் பக்கத் தொடர்சி)

நாயக்காவும் தெரிவித்துள்ளனர் என்று வெரித்தாஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

வடமேல் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தனித்து கூடுதல் வாக்குகளைப்பெற்று 2 போனஸ் உறுப்பினர்களையும் சேர்த்து 25 ஆசனங்களைப் பெற்றது. ஆனால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் இணைந்து 27 ஆசனங்களைப் பெற்றுள்ளன.

அதேபோன்று தென் மாகாண சபையில் ஐக்கிய தேசியக் கட்சி 2 போனஸ் உறுப்பினர்களையும் சேர்த்து 27 ஆசனங்களைப் பெற்றது. ஆனால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் இணைந்து 28 ஆசனங்களைப் பெற்றுள்ளன.

அத்துடன் பொது மக்கள் ஐக்கிய முன்னணி தனித்து ஆட்சி அமைக்க பலம் பெற்றுள்ள மேல் மாகாண சபையிலும், காமினி திஸ்ஸநாயக்காவின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு வழங்க உள்ளது.

மேல் மாகாண சபைத் தேர்தலில் 2 போனஸ் உறுப்பினர்களுடன் பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு மொத்தம் 45 ஆசனங்கள் உள்ளன.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இங்கு 17 ஆசனங்களைக் கைப்பற்றி உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற ஆசனங்கள் 41 மட்டுமே

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் இணைந்து செயற்பட உள்ளதால் ஐக்கிய தேசியக் கட்சி 4 மாகாணங்களிலும், எதிர்க் கட்சிகள் 3 மாகாணங்களிலும் ஆட்சி அமைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

(இ-6)


## மரண அறிவித்தல்

### அப்பையா இராசநாயகம்

இணுவில் தெற்கு பிரபல வர்த்தகர் அப்பையா இராசநாயகம் 14-05 93 வெள்ளியன்று காலமானார். இறுதிக் கிரியைகள் இன்று வியாழன் (20-05-93) அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10 மணிக்கு தாவடிமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
இ. மயூரநாதன், இ. சற்குருநாதன்,
இ. சிவகுருநாதன்.

ஐங்கரன் அரிசிஆலை,
இணுவில்.

(25726)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 20 – 05 – 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org